


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




மலர்:03 இதழ்:239 4 பக்கங்கள் 28:03:2026 சனிக்கிழமை விலை ரூ,6 வருடசந்தா ரூ,1825



ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்.

**விளக்கம்:**
கொடுத்த கொடையினால் பெற்றவர்க்கு வரும் முகமலர்ச்சியைக் கண்டறியாரோ? தாமுடைய பொருளைக் கொடாதே வைத்துப் பின் னிழக்கின்ற வன்கண்ணர். இஃது இடார் இழப்பரென்றது.

## மேற்கு ஆசிய போர் பதற்றம்: மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை



புதுடெல்லி: மேற்கு ஆசிய போரால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிக்கும் தயார் நிலை குறித்து மாநில முதல்வர்களுடன் காணொலி மூலம் பிரதமர் மோடி இன்று ஆலோசனை நடத்துகிறார். ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜல சந்தியில் கச்சா எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்து தடைபட்டுள்ளது. இதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. வளைகுடா நாடுகளில் இருந்து உரங்கள் விநியோகத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேற்காசிய நிலவரம் குறித்து அனைத்து கட்சி பிரதிநிதிகளிடம் மத்திய அரசு நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியது.

இந்நிலையில் மாநிலங்களின் தயார் நிலை மற்றும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய அனைத்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி இன்று காணொலி மூலம் ஆலோசனை நடத்துகிறார். மேற்காசிய போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்கும் திட்டங்கள் மற்றும் தயார் நிலை குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது. இந்த நெருக்கடி நிலையை சமாளிக்க நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களும் ஒரு குழுவாக செயல்படுவதை உறுதி செய்வதுதான் இந்த ஆலோசனை கூட்டத்தின் நோக்கம் ஆகும்.

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் முதல்வர்கள், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், இந்த கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள். ஆனால், இந்த மாநிலங்களின் தலைமை செயலர்களுடன் அமைச்சரவை செயலாளர் தனியாக ஆலோசனை கூட்டம் நடத்துவார்.

## இந்தியாவில் எரிபொருள் விலை உயர்வை தடுக்க பெட்ரோல், டீசல் கலால் வரி குறைப்பு



புதுடெல்லி: இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்வை தடுக்கும் விதமாக அவற்றின் மீதான கலால் வரி குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெட்ரோல் மீதான கலால் வரி ரூ.13-ல் இருந்து, ரூ.3 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ரூ.10 ஆக இருந்த டீசல் மீதான கலால் வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் - ஈரான் இடையிலான போர் காரணமாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால், இந்தியாவில் எரிபொருள் விலை உயரும் அபாயமும் எழுந்தது. இந்நிலையில், விலை உயர்வை தடுக்கும் விதமாக, பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது. அதன்படி, பெட்ரோல் மீதான கலால் வரி ரூ.13-ல் இருந்து, ரூ.3 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

ரூ.10 ஆக இருந்த டீசல் மீதான கலால் வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கூட்டம் முடிந்த பின்னர், கலால் வரி குறைப்பு தொடர்பான அறிவிப்பை மத்திய பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

'மக்கள் பாதிக்கப்படக் கூடாது' - தற்போதுள்ள நிலைமையை ஆய்வு செய்த பிரதமர் மோடி, சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் எந்த ஒரு உயர்வும் சாமானிய மக்களை பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது: நாடு முழுவதும் எரிபொருள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், விலை கட்டுபடியாகக் கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வதே இந்த முடிவின் நோக்கம். நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படவில்லை. மத்திய அரசு பொது முடக்கத்தை அமல்படுத்தும் என்ற வதந்தியிலும் உண்மை இல்லை. எரிபொருள் விநியோகத்தில் எந்த இடையூறும் ஏற்படாது. இதுதொடர்பாக வரும் செய்திகள் ஆதாரமற்றவை. மக்கள் அச்சப்பட வேண்டாம்.

# தவெக வேட்பாளர்கள் 234 பேர் ஒரே கட்டமாக ஞாயிற்றுக்கிழமை அறிவிப்பு

சென்னை: எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக சார்பில் போட்டியிடும் 234 வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் விஜய் ஞாயிற்றுக்கிழமை அன்று அறிமுகம் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:




தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன், மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியாக விளங்கும் தமிழக வெற்றிக் கழகம் தனது அரசியல் பயணத்தில் மிக முக்கியக் கட்டத்தை எட்டியுள்ளது. தமிழ்நாட்டு மக்களைப் பல்வேறு வார்த்தை ஜாலங்களால் தொடர்ந்து ஏமாற்றி வரும் அரசியல் இயக்கங்களுக்கு இடையே மக்களுக்கான உண்மையான ஜனநாயக அரசியலைத் தமிழக வெற்றிக் கழகம் முன்னெடுத்து வருகிறது.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில அளவிலான நிர்வாகிகள் கூட்டம், வரும் 29-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு, சென்னை - நுங்கம்பாக்கம் தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் அவர்கள் கலந்துகொண்டு தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் புதுச்சேரியின் 30 சட்டமன்றத் தொகுதிகள் ஆகியவற்றுக்கான வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கிறார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், இந்த நிகழ்ச்சியில் தலைமைக் கழக நிர்வாகிகள், வேட்பாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட கழகத்தினர் 500 பேரைத் தவிர்த்து வேறு எவருக்கும் அனுமதி இல்லை. தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்நிகழ்ச்சி உள்ளரங்க நிகழ்ச்சியாக நடைபெறும்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் வெற்றிச் சின்னமான விசில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மிகப் பெரிய வெற்றியைப் பெறும் வகையில் கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்புடன் தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்று கூறியுள்ளார்.

## நெய்வேலி அருகே 15 அடி ஆழ கிணற்றில் விழுந்த சிறுவன்: பத்திரமாக மீட்ட காவலருக்கு பொதுமக்கள் பாராட்டு



15 அடி ஆழம் தண்ணீர் உள்ள கிணற்றில் விழுந்த குழந்தையை மீட்ட காவலருக்கு பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர் நெய்வேலி மந்தாரக்குப்பம் பகுதியை சேர்ந்த் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் யோகேஸ்வரன் (வயது 10) இன்று 27.03.26 ஆம் தேதி மாலை கெங்கைகொண்டான் கே.வி. ஆர். நகரில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலில் சீதாராமன் திருக்கல்யாணம் நிகழ்ச்சி கலந்து கொள்வதற்காக குடும்பத்துடன் வந்தனர்

அப்போது கோவிலின் சிறுவர்களுக்குள் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த யோகேஸ்வரன் எதிர்பாராத விதமாக அருகில் இருந்த பால்ராஜ் என்பவரின் வீட்டில் உள்ள 15 அடி ஆழம் கிணற்றில் தவறி விழுந்துள்ளார். தகவல் கிடைத்தவுடன் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் .சங்கர். காவலர் லியாகத்கான் ஆகியோர்கள் கிணற்றில் விழுந்த சிறுவனை கயிற்றின் உதவியோடு மேலே இழுத்து காப்பாற்றி பெற்றோரிடம் நல்ல முறையில் ஒப்படைத்தனர். இதனால் காவலர்களுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## சிவகாசி அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு - 3 அறைகள் தரைமட்டம்



சிவகாசி: சிவகாசி அருகே விஸ்வநத்தம் பட்டாசு ஆலையில் இன்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 3 அறைகள் தரைமட்டமாகின. இதில் ஒருவர் உடல் சிதறி உயிரிழந்த நிலையில், கட்டிட இடிபாடுகளில் சிக்கிய இரு பெண்கள் காயமடைந்தனர்.

சிவகாசி அருகே விஸ்வநத்தம் பகுதியை சேர்ந்தவர் சங்கர் (50). இவர் சென்னை வெடிபொருள் கட்டுப்பாட்டு உரிமம் பெற்று சிவகாசி அருகே விஸ்வநத்தம் - சித்துராஜபுரம் சாலையில் காமராஜர் நகரில் நடேஷ் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் 20-க்கும் மேற்பட்ட அறைகளில் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலை 3.50 மணி அளவில் பட்டாசுக்கு மருந்து செலுத்தும்போது வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் அருகே பட்டாசு இருப்பு வைத்திருந்த அறையும், 50 அடி தூரத்தில் இருந்த அறை என 3 அறைகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த விபத்தில் ஒருவர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கட்டிட இடிபாடுகளில் சிக்கி சித்ராசபுரத்தைச் சேர்ந்த பூமாரி (31), பானுப் பிரியா(32) ஆகிய இரு பெண்கள் காயமடைந்தனர். அவர்களை பொது மக்கள் மீட்டு சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் பட்டாசு ஆலையில் பணியாற்றிய காமராஜர் நகரை சேர்ந்த குருநாதன்(45) என்பவரை தேடி வருகின்றனர். தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விபத்து குறித்து சிவகாசி கிழக்கு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## பாலியல் தொல்லை தந்ததாக மாணவி புகார் - அண்ணா பல்கலை. பேராசிரியர் கைது



சென்னை: மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் ஞானவேல் பாபு கைது செய்யப்பட்டுள்ளார். இதனிடையே, பேராசிரியர் ஞானவேல் பாபுவை பணியிடை நீக்கம் செய்து அண்ணா பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 3-ம் ஆண்டு படிக்கும் மாணவி ஒருவர், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நேரடியாக சென்று புகார் ஒன்றை அளித்தார். அதில், 'பல்கலைக்கழக விடுதியில் தங்கி படித்து வருகிறேன். 'எனது குடும்பம் ஏழ்மையானது. எனக்கு சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணி செய்து வரும் செங்கல்பட்டைச் சேர்ந்த ஞானவேல் பாபுவின் (50) அறிமுகம் வேறு ஒருவர் மூலம் கிடைத்தது.

படித்து பெரிய ஆளாக வேண்டும் என்ற ஆசை மற்றும் கனவு எனக்குள் இருந்தது. ஆனால், போதிய வழிகாட்டல் இல்லை. இதை அறிந்த பேராசிரியர் ஞானவேல் பாபு எனக்கு உதவுவதாக நம்பிக்கை அளித்தார். பின்னர், அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க உதவி செய்தார். கல்வி உதவித்தொகை பெற உதவினார். இதனால், அவர் மீது எனக்கு நன்மதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், நாட்கள் செல்ல செல்ல அவரது அணுகுமுறை மற்றும் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. எனது செல்போன் எண்ணுக்கு அடிக்கடி தொடர்பு கொண்டார். இரட்டை அர்த்தத்தில் ஆபாசமாக பேசத் தொடங்கினார். மேலும், ஆபாசமான வீடியோக்கள் மற்றும் குறுஞ்செய்திகளையும் தொடர்ந்து அனுப்பினார்.

இதையடுத்து, நான் படிப்படியாக விலகினேன். நான் கண்டித்தும் கேட்காமல் 3 ஆண்டாக தொடர் அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறார். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அந்தப் புகாரில் மாணவி தெரிவித்திருந்ததாக போலீஸார் கூறினர்.

இது குறித்து, உரிய விசாரணை நடத்த, கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸாருக்கு காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டார். அதன்படி, வழக்குப் பதிந்து, அவர் வசித்து வந்த கோட்டூர்புரம் குடியிருப்புக்குச் சென்றனர். ஆனால், அவர் அங்கிருந்து த லை ம றை வா னா ர். இதையடுத்து, தனிப்படை அமைத்து போலீஸார் தேடினர்.

இந்நிலையில், அவர் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் உள்ள உறவினர் வீட்டில் பதுங்கி இருந்தது தெரிந்தது. பின்னர் அங்குள்ள போலீஸார் உதவியுடன் ஞானவேல் பாபுவை இன்று தனிப்படை போலீஸார் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தனர்.

முன்னதாக, ஞானவேல் பாபுவை கைது செய்யக் கோரி அண்ணா பல்கலைக்கழகம் முன்பு இந்திய மாணவர் சங்கத்தினர் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, பேராசிரியர் ஞானவேல் பாபுவை பணியிடை நீக்கம் செய்து அண்ணா பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது ஒருபுறம் இருக்க, அவர் மீது மேலும் சில மாணவிகள் புகார் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க. தர்ப்பகராஜ், (26.03.2026) அன்று திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட வேங்கிக்கால் நோதாஜி நகரில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில்தேர்தல்விழிப்புணர்வுவாசகங்களைஅடங்கியஒட்டுவில்லைகளை எரிவாயு உருளையில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# கலெக்டர் தலைமையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் சேமிப்பு கிடங்கு பூட்டி சீல் வைப்பு



விழுப்புரம், மார்ச். 28–

விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திர சேமிப்பு கிடங்கில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 07 சட்டமன்ற தொகுதிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் சேமிப்பு கிடங்கு (26.03.2026) அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 07 சட்டமன்ற தொகுதிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி குலுக்கல் முறையில் (First Level Randomization) ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், மயிலம் சட்டமன்ற தொகுதிக்கு மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், திண்டிவனம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்திலும், வானூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு வானூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்கு விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்திலும், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு விக்கிரவாண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு திண்டிவனம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் (Strong Room) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜான்சி ராணி, தனி வட்டாட்சியர் (தேர்தல்) கணேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுவினர் பங்கேற்ற வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி

### கள்ளக்குறிச்சி கலெக்டர் தகவல்




கள்ளக்குறிச்சி, மார்ச். 28–

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வெள்ளிமலை கிராமத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுவினர் பங்கேற்ற 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தியதேர்தல்ஆணையத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் வெள்ளிமலைகிராமத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு மகளிர் திட்டம் சார்பில் பழங்குடியின மகளிர் சுய உதவிக்குழுவினர் பங்கேற்ற 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கும்மி, ரங்கோலி, பாடல்கள், முழக்கங்கள் மற்றும் பேரணி போன்ற பல்வேறு நிகழ்வுகளின் வாயிலாக, வாக்காளர் கல்வி, வாக்காளர் எழுத்தறிவு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வை அனைவரும் அறிந்திடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வாக்காளர்களிடையே சட்டமன்றத் தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட பெண்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்வராயன்மலை வட்டாட்சியர் கோவிந்தராஜ், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம்,தாம்பரம் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 23.04.2026 அன்று நடைபெறும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னிட்டு " வாக்களிப்பது எனது உரிமை, வாக்களிப்பது எனது கடமை, 100 % வாக்குபதிவு" உறுதிப்படுத்தும் செல்பி ஸ்டாண்டினை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சி தலைவருமான எஸ்.மாலதி ஹெலன் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர்,மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




சிவகங்கை தொகுதியில் திமுக கூட்டணி சார்பில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், முன்னாள் திருவாடானை தொகுதி எம்எல்ஏவுமான கருணாஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, சிவகங்கை நகரின் பல்வேறு பகுதிகளில் அவருக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.அந்த சுவரொட்டிகளில் கருணாஸை விமர்சிக்கும் வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, முக்குலத்தோர்பாதுகாப்புஅமைப்புசார்பில்ஒட்டப்பட்டதாக கூறப்படும் இந்த சுவரொட்டியில், கருணாஸின் புலிப்படையா ?கருணாஸ் Full குடியா ? உனக்கு ஓட்டு மக்களுக்கு வேட்டு, ஸ்டாலின் தொடரட்டும் கருணாஸ் திருந்தட்டும், முடியுமா திரும்பிப் பார் திருவாடானையை என்றும், முக்குலத்தோர் என்று கூறும் மூடனே வீரம் விளைந்த சிவகங்கை மண்ணில் மானங்கெட்ட மது பிரியரே உனக்கு என்ன வேலை என கூறப்பட்டுள்ளது. இந்த சம்பவம் சிவகங்கை தொகுதியில் தேர்தல் சூழலை மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டஆட்சித்தலைவர்ஆர்.அழகுமீனாவழிகாட்டுதலின் படி, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பூதப்பாண்டி பேரூராட்சிக்குட்பட்ட வாக்காளர்களின் வீடுகளில் அனைவரும் வாக்களிப்போம் என்ற ஒட்டுவில்லைகள் பணியாளர்கள் வாயிலாக ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது..



சிவகங்கைமாவட்டம்,மானாமதுரையில்நாம்தமிழர்கட்சிசார்பில்நடைபெற்றபரப்புரை கூட்டத்தில் வேட்பாளர் சண்முகப்பிரியா கலந்து கொண்டு உரையாற்றினார். நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர். பேச்சில், என்சிபிஆர் அறிக்கையை குறிப்பிட்டு மானாமதுரை தொகுதி கஞ்சா மற்றும் மது பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ளதாகவும், கடந்த 50 ஆண்டுகளாக எந்தவித வளர்ச்சியும் இல்லை என்றும் குற்றம்சாட்டினார். மேலும், அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்கள் பிரச்சனைகளுக்காக தொடர்ந்து போராடி வருவதாக தெரிவித்தார். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கூறிய “மோடியா? லேடியா?” கருத்தை நினைவுபடுத்தி, அதிமுக–பாஜக கூட்டணியை விமர்சித்தார். மானாமதுரை தொகுதி (அதிமுக 6 முறை வென்றது) தற்போது பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.மேலும், தன்னை சீமான் நிறுத்தியுள்ளதாகவும்,பணப்பலம்அல்லமக்கள்ஆதரவேமுக்கியம்எனவும்சண்முகப்பிரியா தெரிவித்தார்.

### தேர்தல் பறக்கும் படையினரால் கைப்பற்றப்படும்

# ரொக்கம் மற்றும் பொருட்களைத் திரும்பப் பெற மாவட்ட குறைதீர்க்கும் குழு அமைப்பு

### விருதுநகர் கலெக்டர் தகவல்



விருதுநகர், மார்ச். 28–

2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, விருதுநகர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் முழுமையாக அமலில் உள்ளன. இதன்படி, உரிய ஆவணங்களின்றி ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்)க்கு மேல் ரொக்கப் பணமோ அல்லது ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம்)க்கு மேல் மதிப்புள்ள பொருட்களையோ கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கொண்டு செல்லப்படும் பட்சத்தில், தேர்தல் பறக்கும் படையினர் (Flying Squads) மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினரால் (Static Surveillance Teams) அவை கைப்பற்றப்படுகின்றன. இவ்வாறு சோதனைகளின் போது கைப்பற்றப்படும் தொகை மற்றும் இதர பொருட்களை உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துத் திரும்பப் பெறுவதற்காக, "மாவட்ட குறைதீர்க்கும் குழு / கைப்பற்றுகை விடுவிக்கும் குழு" (District Grievance Committee) அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து, இக்குழுவின் தலைவரான திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் அவர்களிடம் தங்களது பணம் அல்லது பொருட்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓ. சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்களின் விவரம் பின்வருமாறு: வீ.கேசவதாசன், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர். கைபேசி எண்:7373704226 A.வெங்கடேஷ்வரன்,மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர்.கைபேசி எண்: 9095315660 விசாலாட்சி, கணக்கு அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர். கைபேசி எண்:9677527120 எனவே, பொதுமக்கள் உரிய ஆவணங்களுடன் பணத்தையோ அல்லது பொருட்களையோ கொண்டு சென்று தேவையற்ற சிரமங்களைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




மதுரை சிஎஸ்ஐ கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரியில் என் வேலை மற்றும் எஸ் எம் இன்போடெக் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இறுதி ஆண்டு படிக்கும் கல்லூரி மாணவர்கள் மாணவிகளுக்கான வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது, இந்த முகாமிற்கு கல்லூரி முதல்வர் ஜெஸி பாலின் ஜெயப்பிரியா தலைமை வகித்தனர், இந்த வேலை வாய்ப்பு முகாமில் ஹோண்டா, மயூரி, அப்பல்லோ மருத்துவமனை, எஸ்பிஐ லைஃப் இன்சூரன்ஸ், கயல் அக்ரோ ஃபுட், அண்ணாமலை டொயோட்டா, பீமா ஜூவல்லரி போன்ற 40க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று மாணவர்கள் மாணவிகளை தகுதிக்கு ஏற்றார் போல் தேர்வு செய்து தங்கள் நிறுவனங்களில் பணி புரிவதற்கான சான்றிதழ்களை வழங்கினார்கள், இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்டத்தில் இருந்து மட்டும் கல்லூரி இறுதி ஆண்டு படிக்கும் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாணவிகள் பங்கு பெற்றனர்,

# வீரமார்த்தாண்டபுரம் சகாயநகர் குடியிருப்பு பகுதி திருநங்கையர்களுடன் கலெக்டர் பொங்கல் வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்



கன்னியாகுமரி ,மார்ச். 28–

கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தோவாளை வட்டம் வெள்ளமடம் வீரமா ர்த்தாண்டபுரம் சகாயநகர் குடியிருப்பு பகுதி திருநங்கைகளிடையே வாக்காளர் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (27.03.2026) அன்று திருநங்கையர்களுடன் தேர்தல் விழிப்புணர்வு பொங்கல் வைத்து, தெரிவிக்கையில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான சுற்றுலாதளங்கள், வணிக வளாகங்கள், காய்கறி சந்தைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகள், கல்லூரி வளாகங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நேற்று தோவாளை வட்டம் வெள்ளமடம் வீரமார்த்தாண்டம்புரம் சகாயநகர் குடியிருப்பு பகுதி திருநங்கைகளிடையே வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு பொங்கல் வைக்கப்பட்டது. பானைக்குப் பொட்டு வைத்து, அரிசியிட்டு பொங்கல் பொங்கி வரும் வேளையில், அங்கிருந்த திருநங்கைகளுடன் இணைந்து "பொங்கலோ பொங்கல் தேர்தல் பொங்கல்" என முழக்கமிட்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, தேர்தலில் திருநங்கைகளின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் கையெழுத்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் திருநங்கைகள் அனைவரும் ஆர்வத்துடன் தங்களது கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர். தொடர்ந்து அனைவரும் வாக்காளர் உறுதிமொழியியை ஏற்றனர்.

சமூகத்தில் திருநங்கைகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். ஜனநாயகத்தின் மிகப்பெரிய கடமையான வாக்களிப்பதில் அவர்களின் முழுமையாகப் பங்கேற்க வேண்டும். ஒருவரும் விடுபடாமல் தேர்தல் நாளன்று தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதே இந்த விழிப்புணர்வின் நோக்கம். நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 102 திருநங்கையர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சித்திரங்கோடு, மேக்காமண்டபம், சகாயநகர் பகுதியில் உள்ள அனைத்து திருநங்கை வாக்காளர்களும் வரும் ஏப்ரல் 23ம் தேதி அன்று வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், மாவட்ட சமூகநல அலுவலர் விஜயமீனா, துறை அலுவலர்கள், திருநங்கையர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில். மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் மாவட்ட கட்டுப்பாட்டு அறையில் ஜிபிஎஸ, சி வி ஜி எல் குழு மற்றும் எம் சி எம் சி குழு ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தன் குடும்பத்தை நடுத்தெருவில் விட்டு விட்டு பெண் பாதுகாப்பு பற்றி பேச தகுதி இல்லை

## விஜய் மீது அமைச்சர் கீதாஜீவன் காட்டம்

தூத்துக்குடி, மார்ச். 28–

தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதி பூபால்ராயபுரத்தில் நடைபெற்ற மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் தலைமை வகித்தார். மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் முரளிதரன், கம்யூனிஸ்ட் சங்கரன், தனலட்சுமி, விசிக விமல் வங்காளியார், தேமுதிக தயாளலிங்கம், மநீம ஜவஹர், மதிமுக முருகபூபதி, சமக அற்புதராஜ், மமக யூசப், மஜக முகமது ஹசன், எஸ்டிபிஐ மைதீன்கனி, வட்டச் செயலாளர்கள் சேகர், ரவிசந்திரன், கருப்பசாமி, சுரேஷ், ரவி இளங்கோ, ஆல்பட், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பகுதி செயலாளர் தொ.நிர்மல்ராஜ், வரவேற்புரையாற்றினார்.





வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்; முதலமைச்சர் ஸ்டாலின் கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளில் 75 சதவீதம் நிறைவேற்றியுள்ளார்.

5 ஆண்டு திமுக ஆட்சியில் அனைத்து தரப்பினரும் நன்மையடைந்துள்ளனர். 364 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 37 வாக்குறுதிகள் ஒன்றிய மோடி அரசால் தடை பட்டுள்ளது.

சட்டமன்றத்தில் இடைக்கால பட்ஜெட்டில் திரேஸ்புரம் பகுதியில் துண்டில் வளைவு பாலம் படகு நிறுத்தத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வட தேர்தலுக்கு பின் முழுமையாக நடைமுறைக்கு வந்துவிடும் மீனவர்களுக்கு என்று தனியாக கூட்டுறவு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

2021ல் தமிழகத்தில் தொழில்முனைவோர் பெண்கள் ஒன்றரை லட்சம் பேர் இருந்தனர். இப்பேது ஒன்பதரை லட்சம் பேர் இருக்கின்றனர். 2030ல் எல்லோருக்குமான வளர்ச்சி இன்னும் அதிகமாக இருக்கும் அதற்கு திமுக ஆட்சி மீண்டும் அமைய வேண்டும். என்று எல்லோரும் விரும்புகின்றனர். தூத்துக்குடியை பொறுத்த வரைபுதிதாகவிளையாட்டு அரங்க மேம்பாட்டு பணிகள்நடைபெற்று வருகிறது. திரேஸ்புரம் பகுதியில் கடந்த அதிமுக ஆட்சியில் தள்ளுவண்டியை வைத்து பெண்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவார்கள் திமுக ஆட்சி அமைந்தபின் அந்த நிலையை மாற்றி அனைவருக்கும் சீரான குடிநீர் தினமும் வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய கட்டமைப்பு வசதிகளையும் சிறப்பாக மேம்படுத்தியுள்ளோம்.

96ல் அரசியலுக்கு வந்த நான் 30 ஆண்டுகளாக மக்கள் பணியாற்றிவருகிறேன். இப்படி உங்களில் ஒருவராக பயணிக்கும் நான் மக்களின் எண்ணங்களை தேவைகளை புரிந்து கொண்டு செயல்படுகிறேன்.

திமுக 75 ஆண்டுகளை நிறைவு செய்த கட்சி ஒருவருடத்திற்கு முன்பு கட்சியை ஆரம்பித்த விஜய், அவரது கரூர் கூட்டத்தில் பலியான 41 பேர் இல்லத்திற்கு சென்று ஆறுதல் சொல்லாமல் பனையூர் பங்களாவிற்கு அழைத்து ஆறுதல் கூறிய விநோதமான கலாச்சாரத்தையும் நாம் பார்த்தோம். அவரது மனைவி குழந்தைகளை ரோட்டில் தவிக்கவிட்டு கட்சியை நடத்தும் தவெக தலைவர் தமிழ்நாட்டில் உள்ள பெண்கள்நலன் பற்றி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது.

ஜனநாயகன் படத்தை இன்று வரை வெளியிடுவதற்கு வழிவகை இல்லாத நிலையில். பிஜேபி அரசை ஒரு வார்த்தை கூட விமர்ச்சிக்க திராணியில்லை இவரெல்லாம் ஜனநாயகத்தை காப்பாற்ற போகிறேன் என்று பேசுவது கேலி கூத்தாக இருக்கிறது. கொரோனா பேரிடர் மழை வெள்ளம் காலத்தில் அந்தந்த பகுதியில் உள்ள திமுக மற்றும் தோழமை கட்சியினர் எந்த அளவுக்கு பணியாற்றினார்கள் என்று மக்கள் அறிவார்கள்.

தன்னலம் கருதாமல் நாங்கள் பணியாற்றியுள்ளோம். இவ்வாறு உங்களுக்காக உழைக்கின்ற திமுக மற்றும் தோழமை கட்சிகளின் ஆதரவோடு தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறும் என்று பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநிலமீனவரணிதுணைச் செயலாளர் புளோரன்ஸ், துணைமேயர்ஜெனிட்டா, மாநகர துணைச் செயலாளர் பிரமிளா, பகுதி செயலாளர் சுரேஷ்குமார், ஜெயக்குமார், மேகநாதன், மாநில பேச்சாளர் சரத்பாலா, இருதயராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் அந்தோணி ஸ்டாலின், கவிதாதேவி, அருண்குமார், ஐடி விங் பிரபு, நாகராஜன், பழனி, நிக்கோலாஸ் மணி, மாநகர அணி நிர்வாகிகள் கிறிஸ்டோபர் விஜயராஜ், சாகுல்ஹமீது, சந்தன மாரி, டேனியல், ஐடி விங் அண்ணாதுரை, கவுன்சிலர்கள் பவாணி ஜெயசீலி, நாகேஸ்வரி, மெட்டில்டா, ஜெபஸ்டின்சுதா, மாியகீதா, அந்தோணி பிரகாஷ் மார்ஷலின், ஆறுமுகம், பெருமாள்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டச் செயலாளர்கள் சதீஷ்குமார், கதிரேசன், மற்றும் பாஸ்கர் மணி, பிரபாகர், உள்பட மநீம பேச்சாளர் திவ்ய பாரதி, விசிக ஆட்டோ கணேசன், வில்சன், காங்கிரஸ் நாராயணன், தேமுதிக அவைத் தலைவர் அலெக்சாண்டர், கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் வைப்பு



செஞ்சி, மார்ச். 28–

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப் பதிவு இயந்திரங்களை, விழுப்புரத்தில் இருந்து செஞ்சிக்கு கொண்டுவரப்பட்டது,

பின்னர் அனைத்து கட்சி நிர்வாகிகள் முன்னிலை யில் பாதுகாப்பாக செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலக அறையில் வைத்து சீல் வைக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்காக வாக்குப் பதிவு இயந்திரம்(EVM) மற்றும் வாக்குப்பதிவு உறுதிப்படுத்தும் கருவிகள்(VVPAT) மாவட்ட கிடங்கில் இருந்து செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டு கனரக வாகனங்கள் மூலம் எடுத்துவரப் பட்டது.

செஞ்சி தொகுதியில் உள்ள 320 வாக்குச்சாவடிகளுக்கான தேவையுடன் கூடுதலாக 20% கட்டுப்பாட்டு வாக்குப்பதிவு இயந்திரங்களும் 30% (VVPAT) கருவிகளும் சேர்த்து மொத்தம் 334 வாக்குப்பதிவு இயந்திரங்கள், மற்றும் 334 (VVPAT கருவிகள், செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு எடுத்துவரப் பட்டன.

இதனைத் தொடர்ந்து அனைத்து கட்சி நிர்வாகிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தமிழரசன், கார்த்திகேயன், ஆகியோரின் முன்னிலையில் வாகனங்களின் சீல்கள் திறக்கப்பட்டு, இயந்திரங்கள் பாதுகாப்புடன் கட்டுப்பாட்டு அறிக்கு அரசு ஊழியர் மூலம் கொண்டு செல்லப்பட்டன.

மேலும் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அந்த கட்டுப்பாட்டு அறை முழுவதும்(CCTV ) கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.





செங்கல்பட்டு செயின்ட் மேரீஸ் மேல்நிலைப்பள்ளியில் 23.04.2026 அன்று 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி 100 % வாக்குபதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன் முன்னிலையில் நே ற்று நடைபெற்றது.இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருவளர்செல்வி, செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் ரம்யா,துணை ஆட்சியர் மணியரசன் மற்றும் கல்லூரி தலைமை ஆசிரியர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

### திண்டுக்கல் உழவர் சந்தையில் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்

# காய்கறிகளைக் கொண்டு DINDU என்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட தேவாங்கு விழிப்புணர்வு இலச்சினையை கலெக்டர் திறந்து வைத்தார்

திண்டுக்கல், மார்ச். 28–

திண்டுக்கல் மாவட்டம், என்.ஜி.ஓ காலனி, உழவர் சந்தையில் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தோட்டக்கலைத் துறை சார்பில், 20 வகையான பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு DINDU என்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட தேவாங்கு விழிப்புணர்வு இலச்சினையை (LOGO) நேற்று (27.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் திறந்து வைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



இந்தியத் தேர்தல் ஆணையத்தால், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவது குறித்த கால அட்டவணை (Announcement of Election) (15.03.2026)அன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டத்தில் 100% தேர்தல் வாக்குப்பதிவை வலியுறுத்தி "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" மற்றும் "எதிர்காலம் ஏற்றம் பெற வாக்களிப்போம்" என்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் பொறிக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு வருகிறது.

குறிப்பாக, இந்தியாவில் தேவாங்குகளை பாதுகாக்கும் வகையில் தேவாங்கு சரணாலயம் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலில் திண்டுக்கல் மாவட்டத்தில்தான் தேவாங்கு சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை பெருமைப்படுத்தும் விதமாக திண்டுக்கல் மாவட்டத்திற்கான தேர்தல் விழிப்புணர்வு இலச்சினையை DINDU என்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட மனித வடிவிலான தேவாங்கு தேர்தல் விழிப்புணர்வு இலச்சினையை (LOGO) கடந்த 19.03.2026 அன்று வெளியிடப்பட்டது. மேலும், திண்டுக்கல் மாவட்டத்திற்கான தேர்தல் விழிப்புணர்வு இலச்சினை DINDU என்ற பெயரில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் வைக்கப்பட்டு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் தோட்டக்கலைத்துறை சார்பில், முள்ளங்கி, பீட்ரூட், முலாம்பழம், ஆரஞ்சு, தர்பூசணி, வெள்ளரி உள்ளிட்ட 20 வகையான பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு DINDU என்ற பெயரில் வடிவமைக்கப்பட்ட தேவாங்கு விழிப்புணர்வு இலச்சினையை (LOGO) பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து, தேவாங்கு விழிப்புணர்வு இலச்சினை (LOGO) அருகில் பீட்ரூட் மற்றும் முள்ளங்கி கொண்டு வடிவமைக்கப்பட்ட வாக்குச்சாவடி மிஷின் வைக்கப்பட்டுள்ளது. மேலும், தர்பூசணி பழத்தில் எனது வாக்கு விற்பனைக்கு அல்ல, வாக்கு செலுத்த தயாராகுங்கள், இந்திய தேர்தல் ஆணையத்தின் சின்னம், 100% வாக்கு போன்ற வாசகங்கள் பொறிக்கப் பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, என்.ஜி.ஓ காலனி, உழவர் சந்தைக்கு காற்கறிகள் வாங்க வருகைபுரிந்த பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், தோட்டக்கலைத்துறை சார்பில் வடிவமைக்கப்பட்ட தேவாங்கு விழிப்புணர்வு இலச்சினையை (LOGO) திறந்து வைத்த நிகழ்ச்சியில் "ஜனநாயகத்தின் மீது உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ள இந்தியக் குடிமக்களாகிய நாம், நம் நாட்டின் ஜனநாயக மரபினையும், சுதந்திரமான, நேர்மையான, அமைதியான தேர்தல்களின் கண்ணியத்தை நிலைநிறுத்தவும், மதம், சாதி, இனம், சமுதாயம், மொழி மற்றும் எந்த தூண்டுதலுக்கும் அடிபணியாமலும், பயமில்லாமலும் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிப்போம் என்று உறுதி கொள்வோம்" என்ற பொருண்மைகள் அடங்கிய வாக்காளர் உறுதி மொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், வாசிக்க அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் வாக்காளர் உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் காயத்ரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் கோவிந்தராஜ், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் ரே.உமா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ் பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், வட்டாட்சியர் (கிழக்கு) பானுலட்சுமி, மண்டல துணைவட்டாட்சியர் முத்து விநாயகம் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உள்ள மேற்கு நுழைவாயிலில் தென்னக ரயில்வே துறையில் ஓடும் தொழிலாளியாக பணியில் சேர்ந்து பல்வேறு மாவட்டங்களில் 32 ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பாக லோகோ பைலட்டாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற தாமரைச்செல்வனுக்கு நடைபெற்ற பணி நிறைவு பாராட்டு விழாவில் ,அவருடன் பணிபுரிந்த அலுவலர்கள் பணியாளர்கள் சால்வை அணிவித்தும் நினைவு பரிசுகளையும் வழங்கினர். நிகழ்ச்சியில் எஸ் ஆர் எம் யூ மாநில செயலாளர் ரபிக்,தாமரைச்செல்வன் செண்பகம்தாமரை யாழினி ராஜ்கமல் பூர்ணிமா மதுரை மாவட்ட செயலாளர் சரத் ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலூரில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் கி.ஹேமராஜன் ஆதரித்து கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் சூறாவளி பிரசாரம்

திருக்கோவிலூர், மார்ச். 28–

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் நாம் தமிழர் கட்சி திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கி ஹேமராஜன், ரிஷிவந்தியம் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்சூறாவளிபிரச்சாரம் மேற்கொண்டார்.





அப்போது அவர் பேசுகையில :

நாம் சொந்த மண்ணில் நமது உரிமைகளை பறி கொடுத்து விட்டு அடிமை நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். குறிப்பாக கச்சத்தீவு காங்கிரஸ் கட்சி சிங்களர்களுக்கு கொடுத்தது அதற்கு இப்போது இருக்கும் ஆளுங்கட்சி உடந்தையாக இருந்தது என பேசிய சீமான்

கர்நாடகாவில் இருந்து காவிரி நீரை ஒவ்வொரு ஆண்டும் நமக்கு தர வேண்டிய 450 டி எம் சி தண்ணீரை போராடி போராடி பெற வேண்டிய அவல நிலை உள்ளது.

காவிரி நீர் எங்களுக்கு மட்டுமே சொந்தம் என்கிறது கர்நாடகா, முல்லை பெரியாறு நதி நீர் எங்களுக்கு சொந்தம் என்கிறது கேரளா ஆனால் தமிழகத்தில் இருந்து பெறப்படும் நிலக்கரி, மீத்தேன் . ஈத்தேன அணு உலைகளிலிருந்து பெறப்படும் மின்சாரம் இவை அனைத்தும அனைவருக்கும் சொந்தம் என்றால் இதில் எங்கே இருக்கிறது தேச ஒற்றுமை இறையான்மை எனவும் கேள்வி எழுப்பிய சீமான்.

ஒரு சொட்டு காவிரி நீர் கூட கொடுக்க முடியாது என்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு 28 சீட்டுகள், ஒரு ராஜ்ய சபா என திமுக கொடுக்கிறது எனவும் குற்றம் சாட்டிய சீமான்.


காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சிகளோடு இரு திராவிட கட்சிகளும் கூட்டணி வைத்துக் கொண்டு நமது உரிமைகளை எல்லாம் பறிகொடுத்து வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டினார். தொடர்ந்து 18 ஆண்டுகள் மத்திய அமைச்சரவையில் திமுக இடம் பிடித்திருந்தது. அப்பொழுது மாநில கல்வி கொள்கையை எடுத்துக் கொண்டது காங்கிரஸ் கட்சி அதை பறி கொடுத்தது திமுக தான் எனவும் தன் நாட்டு மக்களை மீனவர்களை சுட்டு கொள்பவதோடு ,மீனவர்களை சிறைபிடித்து வைப்பவர்களுக்கு போர் பயிற்சி அளித்து ஆயுதம் கொடுத்து, பண உதவி செய்வது வேறு எங்காவது உண்டா என கேள்வி எழுப்பிய சீமான்.

தன்மான பரம்பரையில் பிறந்த தமிழர்கள் இன்று இலவசமிக்சி, கிரைண்டர் , பிரிட்ஜ் என இலவசங்களுக்கு கை ஏந்தும் அவல நிலைக்கு தள்ளிவிட்டது திராவிட கட்சிகள் எனவும் கேடுகெட்டவர்களிடம் ஆட்சி ஒப்படைத்துள்ளோம் எனவும் வேதனை தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் ஆவேசமாக பேசிய சீமான் நான் உன்னிடம் வாக்கு கேட்பதற்காக கத்தவில்லை எனக்கு ஓட்டு போட்டல போடு இல்லாவிட்டால் போ நான் கவலைப்படுவது உன் வாக்குக்காக அல்ல, உன் வாழ்க்கைத்தரம் நன்றாக இருக்க வேண்டும் எனவும் பேசினார். செய்தியாளர்களை சந்தித்து சீமான் உங்கள் விஜய் உங்கள் விஜய் உயிரென வர நான் என பாடுபரை விட உங்கள் விஜய் உங்கள்விஜய்உயிர்எடுக்க வர நான் என பாடலாம் எனவும் அவர் சென்ற இடங்களில் எல்லாம் அனைத்து கூட்டங்களிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கே இறந்தவர்களை என் கட்சி தம்பிமார்கள் கூட சென்று பார்த்தார்கள் ஆனால் விஜயோ விஜய் கட்சியினரோ சென்று பார்க்கவில்லை எனவும் கடுமையாகவிமர்சித்துபேசினார்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தரங்கை பேரூராட்சி பகுதிகளில் ஏருக்காட்டன்சேரி மேம்பாலத்திற்குள் கீழ் மாவட்ட விவசாயத்துறை கண்காணிப்பாளர் பாலச்சந்திரன் தலைமையில் பறக்கும் படை 4ம் நிலை குழு வாகனங்களை சோதனை செய்தனர்.




மதுரை பந்தடி ஏழாவது தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி அம்மன் 18 ஆம் படி கருப்பணசாமி திருக்கோவில் பொங்கல் விழாவை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் அம்மனுக்கு விசேஷ அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகளும் தீபாரதனைகளும் நடைபெற்றன. இதில் பெண்கள் கலர் கலந்து கொண்டு திருவிளக்கு ஏற்றி அம்மனை தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பாலமுரளி விஷ்ணுபிரியா சிறப்பாக செய்திருந்தனர்.

# கோடை காலம் தொடங்கியுள்ளதால், பொதுமக்கள் அனைவரும் உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்



கோடை காலம் தொடங்கியுள்ளதால், வெப்ப அலை தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தேவையின்றி மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெளியில் செல்லவும், கடின உழைப்பு மேற்கொள்ளவும் தவிர்க்க வேண்டும்

உலக வெப்பமயமாதல் காரணமாக வெப்பநிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இலகுவான, வெளிர் நிறம் கொண்ட பருத்தி உடைகள் அணியவும், வெளியில் செல்லும் போது குடை, தொப்பி, கண்ணாடி, காலணிகள் பயன்படுத்த வேண்டும்.

அதிக வெப்ப நேரங்களில் (12 மணி – 3 மணி) வெளிப்புற வேலைகளை தவிர்க்கவும். பயணிக்கும் போது போதுமான குடிநீர் எடுத்துச் செல்லவும், தாகம் இல்லாவிட்டாலும் அடிக்கடி தண்ணீர் குடிக்கவும், உடலில் நீரிழப்பு ஏற்படுத்தும் ஆல்கஹால், தேநீர், காபி, கார்பனேற்றப்பட்ட பானங்கள் தவிர்க்கவும். லஸ்ஸி, நீர் மோர், எலுமிச்சைச்சாறு போன்ற நீர்ச்சத்து பானங்களை அதிகமாக எடுத்துக்கொள்ளவும்.

வீட்டை குளிர்ச்சியாக வைத்திருக்க திரைச்சீலைகள் மற்றும் சன்ஷேட்கள் பயன்படுத்தவும், குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை நிறுத்தப்பட்ட வாகனங்களின் அருகில் விட வேண்டாம்.

வேலை நேரத்தில் யாராவது மயக்கம் அடைந்தால், உடனடியாக குளிர்ச்சியான இடத்திற்கு மாற்றி தண்ணீர் அல்லது உப்பு சர்க்கரை கரைசல் கொடுக்க வேண்டும். அவசர தேவைகளுக்கு 108 ஆம்புலன்ஸ் சேவையை தொடர்பு கொள்ளவும். வெப்ப அலை பாதிப்பு ஏற்பட்டால் அருகிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்பசுகாதாரநிலையத்தில் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பசுகாதாரநிலையங்களில் வெப்ப அலை பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான படுக்கை வசதிகள் மற்றும் உப்பு சர்க்கரை கரைசல் (ORS) போதுமான அளவில் தயாராக கையிருப்பு உள்ளன.

பொதுமக்கள் மேற்கண்ட அறிவுரைகளை கடைப்பிடித்து வெப்ப அலை தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர். என்.ஓ.சுகபுத்ரா, கேட்டுக்கொண்டுள்ளார்.

### சோளிங்கரில்

# அம்மா மக்கள் முன்னேற்ற கழக மண்டல பொறுப்பாளர் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவிப்பு



ராணிப்பேட்டை, மார்ச் 28

அம்மா மக்கள் முன்னேற்ற கழக மண்டல பொறுப்பாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கட்சியில் இருந்து விலகுவதாக சோளிங்கரில் நேற்று அறிவித்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் சட்டமன்ற தொகுதி முன்னாள் எம்எல்ஏ என். ஜி. பார்த்திபன். இவர் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் மண்டல பொறுப்பாளராக பதவி வகித்து வந்தார். இந்நிலையில் சோளிங்கரில் உள்ள திருமணமண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. முன்னாள் எம்பி சி.கோபால் தலைமை வகித்தார். கூட்டத்தில் அமமுக மண்டல போறுப்பாளர் பார்த்திபன் பேசியதாவது:

கடந்த ஆண்டு நடந்த பொதுக் கூட்டத்தில் சோளிங்கர் சட்டமன்ற தொகுதி அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் என். ஜி. பார்த்திபனுக்கு பெற்று தரப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அறிவித்தார். ஆனால் 2026 சட்டமன்ற தேர்தலில் இப்போது சோளிங்கர் தொகுதி அமமுகவுக்கு ஒதுக்கவில்லை.

மேலும் முன்னாள் அமைச்சர் பாண்டுரங்கன் ஆம்பூர் தொகுதி கேட்டார். அந்த தொகுதியும் கிடைக்கவில்லை. இது நாள் வரை பொதுச்செயலாளர் டிடிவி தினகரனுடன் பயணித்தேன். இனி அக்கட்சியுடன் பயணிக்க போவதில்லை. இன்று முதல் அக்கட்சியில் இருந்து விலகுகிறேன். கட்சி நிர்வாகிகள் அவரவர் விருப்பப்படி செயல்படலாம். எனது முடிவை சிந்தித்து இரண்டு நாளில் அறிவிக்க உள்ளேன் என்றார். இந்த கூட்டத்தில் ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# அதிமுக ஆற்காடு சட்டமன்ற தொகுதி வேட்பாளராக மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சுகுமார் அறிவிப்பு




ஆற்காடு, மார்ச்.28

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆற்காடு, ராணிப்பேட்டை, சோளிங்கர், அரக்கோணம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. அதில் ஆற்காடு சட்டமன்ற எஸ்.எம். சுகுமார், அரக்கோணம் சட்டமன்ற வேட்பாளராக சு.ரவி ஆகியோர் வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளனர். மேலும் தேசிய ஜனநாயக கூட்டணியான தா.மா.க.கட்சி வேட்பாளராக கார்த்திகேயன் அறிவிக்கப்பட்டுள்ளார். இதில் ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட அதிமுக செயலாளரான எஸ்எம்.சுகுமார் கடந்து 2021 தேர்தலில் ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு தோல்வி தழுவிய நிலையில் தொகுதி மாறி இந்த முறை ஆற்காடு தொகுதியில் அதிமுக வேட்பாளராக எஸ் எம் சுகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து அதிமுகவினர் மற்றும் கூட்டணி கட்சி தலைவர், நிர்வாகிகள் தொண்டர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை அவருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

### திண்டிவனம் அரசு மருத்துவமனை:

# பணியாளர் பற்றாக்குறை விவகாரத்தில் முரண்பட்ட விளக்கங்கள்

## முஸ்லிம் மக்கள் கழகம் கடும் கண்டனம்





விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அமைந்துள்ள அரசு தலைமை மருத்துவமனையில் பணியாளர் பற்றாக்குறை நிலவுகிறது என்ற புகாரை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. எனினும், அந்த விளக்கம் உண்மை நிலைக்கு முரணானது என முஸ்லிம் மக்கள் கழகம் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

திண்டிவனத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனர் தலைவர் ச.சு.ஜைனுதீன் அளித்த மனுவில், கடந்த பிப்ரவரி 4, 2026 அன்று தமிழக முதலமைச்சரால் காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட இந்த அரசு மருத்துவமனையில் இன்னும் போதிய பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக மருத்துவர்கள், உதவி செவிலியர்கள் உள்ளிட்ட முக்கிய பணியிடங்கள் காலியாக இருப்பதால் பொதுமக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவிற்கு பதிலளித்த மாவட்ட நிர்வாகம், மருத்துவமனை திறக்கப்பட்டதிலிருந்து சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், தேவையான அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும், மருத்துவ அதிகாரிகளுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்ய இயக்குநரகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. ஆனால், இந்த விளக்கத்தை முஸ்லிம் மக்கள் கழகம் வன்மையாக மறுத்துள்ளது. இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அளித்த பதில்கள் உண்மை நிலையை பிரதிபலிப்பதில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அன்றாட சிகிச்சைக்கு தேவையான அளவில் மருத்துவர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை என்றும்,

உதவி செவிலியர்கள் உள்ளிட்ட முக்கிய பணியாளர்களின் பற்றாக்குறை தொடர்ந்து நீடித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனால், திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பணியாளர் நியமனம் தொடர்பான உண்மை நிலையை அரசு தெளிவுபடுத்தி, தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்த்து வருகின்றனர்.

# பாலியல் வன்புணர்ச்சி வழக்கில் இளைஞருக்கு 11 ஆண்டு சிறை தண்டனை



விழுப்புரம், மார்ச் 28;

திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி 18 வயது பெண்ணை பாலியல் வன்புணர்ச்சி செய்த வழக்கில் இளைஞருக்கு 11 ஆண்டு சிறை தண்டனை விதித்து விழுப்புரம் மகிளா நீதிமன்றம் தீர்ப்பளித்தது. விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் தாலுக்கா மேல்பாதி கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரனின் மகன் வீரமணி (24) என்பவர், கடந்த 06.03.2023 அன்று அதே கிராமத்தில் உள்ள முருகன் கோவில் அருகே 18 வயது பெண்ணிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் வன்புணர்ச்சி செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் கடந்த 17.03.2023 அன்று விழுப்புரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் poolisaar வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். இந்த வழக்கு விழுப்புரம் மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், வழக்கை விசாரித்த நீதிபதி வினோதா, குற்றம் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து வீரமணிக்கு 11 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.25,000 அபராதம் விதித்துதீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அரசு தரப்பில் இருந்து ரூ.1 லட்சம் நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டார். இந்த வழக்கில் விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் முத்துலட்சுமி விசாரணை நடத்தினார். அரசு தரப்பில் வழக்கறிஞர் சங்கீதா ஆஜராகி வாதாடினார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூரில் செயல்பட்டு வரும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஜேசிஐ சீர்காழி கிரீன் சிட்டி அமைப்பு, சீர்காழி அரசு மருத்துவமனை மற்றும் கல்லூரியில் செயல்பட்டு வரும் என்எஸ்எஸ் , ஒய்ஆர்சி , ஆர்ஆர்சி உள்ளிட்ட அமைப்புகளின் முன்னெடுப்பில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் கல்லூரியில் படிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பெருந்திரளாக பங்கேற்று ஆர்வமுடன் ரத்ததானம் செய்தனர். ரத்ததானம் செய்த மாணவ மாணவியருக்கு அரசு மருத்துவமனை சார்பில் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜேசிஐ சீர்காழி கிரீன் சிட்டி அமைப்பின் தலைவர் கவிமோகன், அரசு மருத்துவர் அறிவழகன், கல்லூரி முதல்வர், என் எஸ் எஸ் ஒருங்கிணைப்பாளர் சசிகுமார், ஒய்ஆர் சி ஒருங்கிணைப்பாளர் கணேசன், ஆர்ஆர்சி ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், தாய் ரத்ததான அமைப்பின் தலைவர் அப்பாஸ்அலி, ஒருங்கிணைப்பாளர் அன்பு, ஜேசிஐ அமைப்பின் செயலாளர் சக்திபாலன், பொருளாளர் சடகோபன் மற்றும் அரசு மருத்துவமனை செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி பேரூராட்சி வாத்தியார் தெரு சீதாராமர் பஜனை கோயிலில் ராமநவமி முன்னிட்டு உற்சவர் சீதா ராமர் லட்சுமணனுக்கு வண்ண மலர்கள் அலங்காரம் செய்து மங்கள இசை வாக்கியங்கள் முழங்க வான வேடிக்கையுடன் திருவீதி உலாவில் பக்தர்களுக்கு காட்சியளித்த சுவாமி.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் கருவாழக்கரை அருகே உள்ள மருதூர் கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ ராம வரதாஹினி மடம் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு ராம நவமியை முன்னிட்டு மஞ்சப்பொடி, மாப்பொடி, பால், இளநீர், சந்தனம் உள்ளிட்ட மங்கல பொருட்களினால் அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து அலங்காரம் அர்ச்சனை நடைபெற்று மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பானகம், நீர்மோர், சுண்டல், வடை உள்ளிட்ட பிரசாதங்களும் நெல் தானமும் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை சாம்பசிவம், கேசவன், கண்ணன் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066